தினகரன் புரசைவாக்கம் சன்டே
Supplement to Dinakaran issue Date: 18-11-2012

கண்காட்சிக்கு வாங்க... அபூர்வ தகவல்களை தெரிஞ்சுக்கோங்க



# தகவல் சொல்லுது தபால்தலை

## 16 வரை உண்டு

எல்லாருக்குமே ஏதாவது ஒரு ஹாபி இருக்கும். சிலர் புக் படிப்பாங்க, சிலருக்கு விளையாடுவது ஹாபி, சிலர் ஓவியம் வரைவாங்க... இப்படி ஹாபி இல்லாத மனிதர்களே கிடையாது. ஆனா, இன்றைய தலைமுறை குட்டீஸ்களுக்கு ஹாபி என்றாலே இரண்டே விஷயம்தான். ஒன்று டிவியில் வரும் கார்ட்டூன் மற்றொன்று கம்ப்யூட்டர் கேம்ஸ்.

அந்த காலத்தில் பழைய பொருட்களை சேகரித்து வைக்கும் பழக்கம் இருந்தது. அதில் குறிப்பிடத்தக்கது ஸ்டாம்ப் கலெக்ஷன். பள்ளி மாணவர்கள், தங்கள் நோட்டுகளில் அரிய வகை ஸ்டாம்ப்களை ஒட்டி சேகரித்து வைப்பார்கள். இப்போது அந்த பழக்கம் ரொம்பவே குறைந்து விட்டது. ஸ்டாம்ப் கலெக்ஷன், காயின் கலெக்ஷன், பேனா கலெக்ஷன், புத்தக கலெக்ஷன் போன்றவை எல்லாம் வெறும் பொழுதுபோக்காக மட்டுமின்றி அரிய வரலாற்று தகவல்களையும் குழந்தைகள் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை தூண்டுவதாகும்.

அந்த வகையில், இன்றைய குழந்தைகள், இளைஞர்கள் மத்தியில் ஸ்டாம்ப் கலெக்ஷனின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வு கண்காட்சி ஒன்று நியூ ஆவடி சாலையில் உள்ள ஐசிஎப் ரயில்வே மியூசியத்தில் நடக்கிறது. இதில், 80 ஃப்ரேம்களில் 23 தலைப்புகளில் 10 ஆயிரம் ஸ்டாம்ப்கள் வைக்கப்பட்டுள்ளன.

நம்மை பொறுத்தவரையில் காகிததால் ஆன ஸ்டாம்ப்களைத்தான் பார்த்திருப்போம். ஆனால் இந்த கண்காட்சியில் பட்டு துணி, கதர் துணி, நூல், பிளாஸ்டிக், ரப்பர், கார்க், வெள்ளி, வெண்கலம், தங்கம், மரம், அலுமினியம், முத்து, கண்ணாடி போன்றவற்றை பயன்படுத்தி வெளியிட்டுள்ள ஸ்டாம்ப்கள் இடம் பெற்றுள்ளன. பல நாடுகளில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டு அபூர்வ ஸ்டாம்ப்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர, சந்தனம், ரோஜா, மல்லி போன்ற வாசனை பொருட்கள், காபி, சாக்லேட் போன்ற நறுமணப் பொருட்கள் கொண்ட ஸ்டாம்ப்களையும் காணலாம். கிராம போன் தட்டு, குறுந்தகடு ஸ்டாம்ப்களும் கூட உண்டு.

கண்காட்சியில் இடம் பெற்றுள்ள அரிய வகை ஸ்டாம்களில் சில உங்களுக்காக...



**தங்க ஸ்டாம்ப்:** சாலமன் தீவு சார்பில் 24 காரட் சொக்க தங்கத்தால் ஆன ஸ்டாம்ப். 2005ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதில், ஒவ்வொரு கால கட்டத்திலும் பொறுப்பில் இருந்த போப் ஆண்டவர்களின் உருவப்படம் பொறிக்கப்பட்டுள்ளது.





**பழமையான ஸ்டாம்ப்:** அமெரிக்காவின் முதல் ஸ்டீம் இன்ஜின் படத்துடன் அந்நாட்டு ரயில்வே துறை வெளியிட்ட ஸ்டாம்ப். வெளியிடப்பட்ட தேதி 27-3-1969.

எம்பயர் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் ரயில் படத்துடன் 1-5-1901ம் ஆண்டு பிரிட்டன் வெளியிட்ட ஸ்டாம்ப். இவ்விரு ஸ்டாம்ப்களும் ரயில்வே துறையின் மிகப்பழமையான ஸ்டாம்ப்களாக உள்ளன.



**மர ஸ்டாம்ப்:** பிரான்ஸ் நாட்டு விமானத்துறையின் 50ம் ஆண்டு விழாவையொட்டி 7-10-1983ல் வெளியிடப்பட்ட மரத்தினால் ஆன ஸ்டாம்ப்.



**சந்தன ஸ்டாம்ப்:** இந்திய தபால் துறை சார்பில் 2006ம் ஆண்டு வெளியிடப்பட்ட சந்தன மர ஸ்டாம்ப். இந்த ஸ்டாம்ப்பை நுகர்ந்து பார்த்தால் சந்தன வாசனை வரும்.



**ரோஜா ஸ்டாம்ப்:** ரோஜா மலர்களின் வகைகளை அறிந்து கொள்ளும் வகையில் இந்திய தபால் துறை சார்பில் கடந்த 2007ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்டாம்ப். இந்த ஸ்டாம்ப்பை நுகர்ந்து பார்த்தால் ரோஜா மலர் வாசனை வரும்.



**துணி ஸ்டாம்ப்:** மேற்கிந்திய தீவை சேர்ந்த செயின்ட் வின்செண்ட் நாட்டில் 2003ல் வெளியிடப்பட்ட துணி ஸ்டாம்ப்.

**நூல் ஸ்டாம்ப்:** மேற்கிந்திய தீவு நாடுகளில் 2003ல் வெளியிடப்பட்ட நூல் ஸ்டாம்ப்கள்.




ஸ்டாம்ப் கலெக்ஷன் கண்காட்சி குறித்து ஐசிஎப் இளநிலை பொறியாளர் ஸ்ரீதரன் கூறுகையில், 'இக்கண்காட்சி டிசம்பர் 16ம் தேதி வரை நடக்க உள்ளது. இதில், 30 [illegible] கலெக்ஷன்கள் இடம் பெற்றுள்ளன. இந்தியா, பூடான், சாலமன் தீவு உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஸ்டாம்ப்கள் வைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சியை பார்க்க கட்டணம் ஏதுமில்லை. அனுமதி இலவசம். ஆனால் ரயில் மியூசியத்துக்கு வர ரூ.20 நுழைவுக்கட்டணம் செலுத்த வேண்டும். காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை கண்காட்சியை பார்க்கலாம். திங்கட்கிழமை விடுமுறை' என்றார். நீங்களும் கண்காட்சி பார்க்க வேண்டுமெனில் நியூ ஆவடி சாலை காந்திநகர் பஸ் நிறுத்தம் அருகே உள்ள வட்டார ரயில் அருங்காட்சியகத்துக்கு வாங்க.

தொடர்புக்கு: 80560 50360